மாலை முரசு

பக்கங்கள் 16 + 02

## வி.சி.க. ஆதரவுடன் பெரும்பான்மையை எட்டியது த.வெ.க.

தமிழகத்தில் 'தளபதி' ஆட்சி



(விரிவான செய்தி 14 ஆம் பக்கத்தில்)

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | சித்திரை 26 சனிக்கிழமை 09.05.2026 | அதிர்வு 283

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழ். போதனாவில் பயங்கரத் தீ விபத்து!

## பல கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் நாசம் மின்கசிவா? சதியா? என்று தீவிர விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதான மருந்து களஞ்சியசாலையில் இன்று அதிகாலை ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில், பல கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தீக்கிரையாகியுள்ளன.

04▶










# யாழ். வைத்தியசாலை தீ விபத்தில் பல ஆயிரம் கோடி ரூபா இழப்பு!

## அமைச்சர் சந்திரசேகர் அதிர்ச்சித் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருந்துக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தால் ஏற்பட்டுள்ள இழப்புகள் பல ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமாக இருக்கலாம் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இன்று அதிகாலை தீக்கிரையான மருந்துக் களஞ்சியப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த அனர்த்தம் குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த அனர்த்தம் எமது மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். இது தற்செயலாக நடந்ததா அல்லது ஏதாவது சதிச் செயலாக இருக்குமா என்ற கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், இது சதிச் செயலாக இருக்காது என்றே நான் நம்புகின்றேன்.



தீ விபத்துக்கான உண்மையான காரணம் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையின் பின்னரே உறுதிப்படுத்தப்படும்.” – என்றார்.

வைத்தியசாலையில் மருந்துகள் தீக்கிரையாகியுள்ள போதிலும், நோயாளர்களுக்கான மருத்துவ சேவைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று அமைச்சர் உறுதியளித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து உரிய அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தேவையான மருந்துப் பொருள்களை உடனடியாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

களஞ்சியசாலையில் இருந்த பெறுமதிமிக்க மருந்துகள் மற்றும் உபகரணங்கள் அழிவடைந்துள்ளதால், இதன் நிதி ரீதியான இழப்பு பல ஆயிரம் கோடிகளைத் தாண்டும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

யாழ். போதனா வைத்தியசாலை வரலாற்றில் ஒரு பாரிய அனர்த்தமாகப் பார்க்கப்படும் இந்தத் தீ விபத்து குறித்து பொலிஸாரும் துறைசார் அதிகாரிகளும் மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

# பகுப்பாய்வு ஆய்வுகள் நிறைவடையும் வரை எரிந்த பகுதி பொலிஸாரின் கட்டுப்பாட்டில்!

## புற்றுநோய் மருந்துகளும் தீக்கிரை என்று ஸ்ரீபவானந்தராஜா எம்.பி. தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். போதனா வைத்தியசாலையின் தீக்கிரையான மருந்துக் களஞ்சியப் பகுதி, அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் ஆய்வுகள் நிறைவடையும் வரை பொலிஸாரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் உதவிப் பணிப்பாளரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான அவர், இன்று அனர்த்தம் இடம்பெற்ற பகுதியை நேரில் ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறினார்.



இன்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த அனர்த்தம் ஆரம்பமானது என்று தெரிவித்த அவர், தீ விபத்தின் பாதிப்புகள் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

“எரியுண்ட களஞ்சியசாலையில் புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகள் உள்ளிட்ட அதிதீவிர சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் பெறுமதிமிக்க மருந்துகள் வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் தற்போது தீக்கிரையாகியுள்ளன.

இந்த அனர்த்தத்தால் வைத்தியசாலைக்குப் பல கோடி ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக தற்போது பொலிஸ் விசாரணைகள் ஒருபுறமும், வைத்தியசாலையின் உள்ளக விசாரணைகள் மறுபுறமும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தீ விபத்துக்கான காரணம் மற்றும் சேத விவரங்களை உறுதிப்படுத்த பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை அவசியமாகும். அதுவரை எரியுண்ட பகுதி பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கும்.”–என்று அவர் சுட்டிக்காட்டினார்.





## யாழ். வைத்தியசாலை அனர்த்தத்தில்

# எரிந்த மருந்துக் களஞ்சியத்தை நேரில் ஆய்வு செய்தார் ஆளுநர்

### மீட்புப் படையினருக்கு நெகிழ்ச்சியான பாராட்டு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் எரிந்து மிகப் பெரிய சேதத்துக்குள்ளான மருந்துக் களஞ்சியத்தை, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் இன்று காலை நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு ஆளுநரை அழைத்துச் சென்று நிலைமைகளை நேரில் விளக்கினார்.

அதிகாலையில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள், தீப்பரவலில் இருந்து பாதுகாக்கப்பட்ட மருந்துகளை உடனடியாகப் பொருத்தமான இடத்துக்கு மாற்றியமை மற்றும் நோயாளர்களுக்கான மருந்து விநியோகத்தில் எவ்வித இடையூறுகளும் ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள மாற்று ஏற்பாடுகள் குறித்து அவர் ஆளுநருக்குத் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த பணிப்பாளர், வைத்தியசாலையின் உள்ளக மருந்துக் களஞ்சியத்திலிருந்தும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்தும் தடையின்றி மருந்துகளை வழங்குவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

இதன்போது, தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் தமது உயிரையும் பொருட்படுத்தாது, மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் படையினருக்கு ஆளுநர் நேரில் சென்று தனது விசேட பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

“பெரும் சேதத்தைத் தணிப்பதற்கு நீங்கள் எடுத்த இந்த வீரமிக்க முயற்சிக்கு வார்த்தைகளால் நன்றி கூற முடியாது” – என்று அவர் தீயணைப்பு வீரர்களிடம் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தத் தீயைக் கட்டுப்படுத்தும் கூட்டு முயற்சியில் உடனடியாகச் செயற்பட்டுச் சிறப்பான பங்களிப்பை வழங்கிய இராணுவத்தினர், விமானப் படையினர் மற்றும் பொலிஸாருக்கும் ஆளுநர் தனது கௌரவத்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

மேலும், இக்கட்டான இச்சூழ்நிலையில் அர்ப்பணிப்புடன் இணைந்து செயலாற்றிய வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலை ஊழியர்களுக்கும் ஆளுநர் விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இதேவேளை, தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் நேரடியாகப் பங்கெடுத்த தீயணைப்பு வீரர்கள், படையினர் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் சுவாசப் பரிசோதனை உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவப் பரிசோதனைகள் வைத்தியசாலையால் முன்னெடுக்கப்படும் என்றும் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி இதன்போது ஆளுநருக்கு உறுதியளித்தார்.













# வாக்குமூலம் கேட்டு கபில மீது சித்திரவதை

## ரமேஷ் பத்திரண குற்றச்சாட்டு

(ஞான பிரசாந்தன்)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு வாக்குமூலம் அளிக்குமாறு கபில சந்திரசேனவுக்குப் பாரிய அழுத்தம் கொடுக்கப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண பரபரப்புக் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கபில சந்திரசேன மற்றும் ரங்க ராஜபக்ஷ ஆகியோரின் மரணங்கள் தற்செயலானவை அல்ல என்று சுட்டிக்காட்டிய ரமேஷ் பத்திரண, மேலும் கூறியதாவது:-

"தன் மீது கட்டாயப்படுத்தி வாக்குமூலங்கள் பெறப்படுவதாகக் கூறி கபில சந்திரசேன உயிருடன்



இருந்தபோதே சத்தியக்கடதாசி ஒன்றை வழங்கியிருந்தார். இவ்வாறான மரணங்கள் திட்டமிட்ட கொலைகளா அல்லது தற்கொலைக்குத் தூண்டும் மன ரீதியான சித்திரவதைகளா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தினரை வழக்குகளில் சிக்க வைக்க இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு ஊடாக அரசு இவ்வாறான கீழ்த்தரமான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது.

தற்போதைய அரசின் செல்வாக்கு வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால், அதனை மறைக்கவே இவ்வாறான அச்சுறுத்தல் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது.

மே தினக் கூட்டங்களில் நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து ஜனாதிபதி முன்கூட்டியே அறிவிப்பது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாரதூரமாகப் பாதிக்கும் செயலாகும்." – என்றார்.

அரச நிர்வாகம் மற்றும் திறைசேரி விவகாரங்கள் குறித்து அவர் பல குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தார்.

"திறைசேரியில் 'ஹேக்கர்கள்' மூலம் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. அனுபவமற்ற அரசியல் நியமனங்களால் அரச சேவை சீர்குலைந்துள்ளதோடு, நிலக்கரி மற்றும் கொள்கலன் மோசடிகளுக்கு இந்த நிர்வாகக் குறைபாடே காரணமாக அமைந்துள்ளது." – என்று அவர் கூறினார்.

நீதித்துறை மற்றும் அரச சேவையைச் சுதந்திரமாக இயங்க விடுமாறு அரசை வலியுறுத்திய அவர், தமது கட்சி தற்போது நாடு தழுவிய ரீதியில் பலமான மறுசீரமைப்புப் பணிகளில் இறங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.



## யாழ். போத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை வேளையில் மருந்து களஞ்சியப் பகுதியில் திடீரெனத் தீப்பரவல் ஆரம்பமானது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர், இராணுவத்தினர், விமானப் படையினர், பொலிஸார் மற்றும் மின்சார சபையினர் எனப் பல தரப்பினர் சுமார் 5 மணிநேரத்துக்கும் மேலாகப் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

மருந்து களஞ்சியசாலைக்குள் இருந்த எளிதில் தீப்பற்றக்கூடிய அமிலங்கள் மற்றும் இரசாயனப் பொருள்கள் காரணமாக தீ மிக வேகமாகப் பரவியது. இதனால் கட்டடத்தின் பெரும்பகுதி சேதமடைந்ததுடன், களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அத்தியாவசிய மருந்துகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இன்று பகல் முழுவதும் களஞ்சியசாலையைச் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

வைத்தியசாலையின் மருந்து களஞ்சியப் பகுதியில் மருந்துகளைப் பாதுகாப்பதற்காக அண்மையில் குளிரூட்டப்பட்ட அறை ஒன்று அமைக்கப்பட்டது. அந்த அறையில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாகவே இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும், இது மின்கசிவா? அல்லது சதியா? என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தத் தீ விபத்தால் ஏற்பட்ட மொத்த நட்டம் இன்னும் கணக்கிடப்படவில்லை.

வடக்கு மாகாணத்தின் பிரதான வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தம் நோயாளர்களுக்கான மருந்து விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

# தற்கொலையா? திட்டமிட்ட படுகொலையா?

## சாட்சியாளர்களின் மர்ம மரணங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. கடும் சந்தேகம்

(ஞான பிரசாந்தன்)

அரச திறைசேரி நிதி மோசடி மற்றும் ஏயார்பஸ் கொடுக்கல் வாங்கல் வழக்குகளுடன் தொடர்புடைய முக்கிய சாட்சியாளர்களின் மர்ம மரணங்கள் குறித்து அரசு உடனடி மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

எதுல்கோட்டேயில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றுநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா இதனைத் தெரிவித்தார்.

முக்கிய ஊழல் வழக்குகளுடன் தொடர்புடைய நபர்கள் அடுத்தடுத்து உயிரிழக்கின்றமை தற்செயலானவையா அல்லது திட்டமிட்ட படுகொலைகளா என்ற கேள்வி எழுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திறைசேரி நிதி மோசடி குறித்து முறைப்பாடுகளை முன்வைத்த இந்த அதிகாரியின் மரணம் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தற்கொலையா அல்லது மோசடிகளை மூடிமறைக்க நடந்த கொலையா என்பது குறித்து கண்டறியப்பட வேண்டும்.




சர்ச்சைக்குரிய ஏயார்பஸ் வழக்கில் பிரதான சாட்சியாளராக இருந்த கபில சந்திரசேனவின் மரணம் மர்மமாக உள்ளது. நீதிமன்றத்தில் உண்மைகள் வெளிவருவதைத் தடுக்க ஏதேனும் தரப்பினர் இதில் பின்னணியில் உள்ளனரா என விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்படும் திகதிகளை ஜனாதிபதி பகிரங்கமாக அறிவிப்பதானது, நீதித்துறையின் சுதந்திரத்தில் அரசியல் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றதோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது." – என்றும் அவர் சாடினார்.

"இவ்வாறான சூழல் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்காது என்ற பயத்தை ஏற்படுத்தி, அவர்களைத் தற்கொலைக்குத் தூண்டலாம் அல்லது மர்மமான முறையில் கொலை செய்ய வழிவகுக்கலாம்" என்றும் அவர் எச்சரித்தார்.

தற்போதைய அரசில் உள்ள அமைச்சர்களில் பலர் 2005 ஆம் ஆண்டு ராஜபக்ஷவினரை ஆட்சிக்குக் கொண்டு வரப் பாடுபட்டவர்கள் என்பதை நினைவூட்டிய அவர், இந்த மோசடிகளுக்கும் அரசில் இருப்பவர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் வலுவாக நிலவுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

ஊழலுக்கு எதிராகத் தண்டனை வழங்குவதில் அரசுக்கு உண்மையான நோக்கம் இருக்குமானால், சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சுஜித் சஞ்சய பெரேரா இதன்போது வலியுறுத்தினார்.

# இந்திரவிழாவில் சுகாதாரச் சீர்கேடு: 6 வியாபாரிகளுக்குப் பிடியாணை!

## அறுவருக்கு 1,30,000 ரூபா தண்டப்பணம்

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறை இந்திரவிழாவின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது செயற்பட்ட 6 உணவு நிலைய உரிமையாளர்களுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் அறுவருக்கு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் நடைபெற்ற இந்திரவிழாவை முன்னிட்டு, பொது மக்களுக்கு வழங்கப்படும் உணவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நகர சபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் தலைமையிலான சுகாதாரக் குழுவினர், விழாப் பகுதியில் இயங்கிய உணவு நிலையங்களைச் சோதனையிட்டனர்.



இதன்போது ஐஸ்கிறீம் வாகனங்கள், காரம் சுண்டல் மற்றும் பானிப் பூரி விற்பனை நிலையங்கள் உட்பட 12 நிலையங்களில்,

☆ மருத்துவச் சான்றிதழ் இன்றி உணவுகளைக் கையாண்டமை.

☆ திண்மக் கழிவுகளைத் திறந்த வெளியில் வீசி சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தியமை.

☆ அனுமதிக்கப்பட்ட தரமான கொள்கலன்களுக்குப் பதிலாக, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் ரகக் கொள்கலன்களைப் பொதியிடலுக்குப் பயன்படுத்தியமை

– ஆகிய சுகாதார சீர்கேடுகள் கண்டறியப்பட்டன.

இது தொடர்பாக பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணையின் போது முன்னிலையாகியிருந்த 6 வியாபாரிகள் தமது குற்றங்களை ஏற்றுக் கொண்டனர். இதனையடுத்து அவர்களுக்கு மொத்தம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. அதேவேளை, நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறிய வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஏனைய 6 வியாபாரிகளுக்கும் நீதிவான் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

பொது நிகழ்வுகளின் போது சுகாதார விதிகளை மீறிச் செயற்படும் வியாபாரிகளுக்கு எதிராக இவ்வாறான கடும் நடவடிக்கைகள் தொடரும் என்று சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கரும்புகை வாகனங்கள்

இலங்கையில், குறிப்பாக கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற முக்கிய நகரங்களில் வளிமண்டல மாசு சமீபகாலமாக ஒரு தீவிரமான சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவின் துணைக் கண்டத்தில் இருந்து பரவும் காற்று மாசு மற்றும் உள்ளூர் மாசுபாடுகள் இதற்கு முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

வாகனப் புகை, தொழிற்சாலைகள், குப்பை கூளங்கள் எரிப்பு மற்றும் இந்தியாவின் நிலப்பரப்பில் இருந்து வரும் காற்று மாசு ஆகியவை இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணங்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் வாகனங்கள் உமிழும் புகையே அறுபது வீதமான பாதிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

வாகனங்கள் மூலம் வளிமண்டலம் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய முயற்சிகள் அரச நிர்வாகத் தரப்பில் எடுக்கப்பட்டிருக்கின்ன்அன எனக் கூறப்படுகின்றது.

அதிகப்படியான புகை வெளியேற்றம் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட பராமரிப்பு உத்தரவுகளைப் பின்பற்றத் தவறும் வாகனங்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பராமரிப்பு வழிகாட்டுதல்களைப் புறக்கணிக்கும் அல்லது தொடர் ஆய்வுகளைத் தவிர்க்கும் உரிமையாளர்கள், வருவாய் உரிமங்கள் மற்றும் பிற வாகன ஆவணங்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று திணைக்களம் கூறியுள்ளது.

கருப்புப் புகை வெளியேற்றம் என்பது வெறும் தொழில்நுட்பக் குறைபாடு மட்டுமல்ல, அது எதிர்கால சந்ததியினரைப் பாதிக்கும் ஒரு சுற்றுச்சூழல் அபாயமும் ஆகும் என அதிகாரிகள் எச்சரித்தமையோடு, வாகன உரிமையாளர்கள் முறையான பராமரிப்பை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினர்.

வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் ஏனைய மோசமான விளைவுகளுக்கு அப்பால் அவை உமிழும் கரும்பு புகை சூழலில் ஏற்படுத்தும் பாதிப்பும் விலைவுகளும் மிக மோசமானவை என்று ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

வாகனங்கள் அத்தகைய பாதிப்பை சூழலுக்கு ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிகின்றது.

காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்த மாதம் முதல் புகை வெளியேற்ற சோதனைகள் சாலையோரங்களில் தீவிரப்படுத்தப்படும் என்று வாகனப் புகை வெளியேற்றச் சோதனை அறக்கட்டளை நிதியம் தெரிவித்தது. இதற்காக நாடு முழுவதும் ஆங்காங்கே நடமாடும் புகை வெளியேற்றச் சோதனை அலகுகள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

சூழலைப் பாதிக்கும் மோசமான வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.



# பசறை கல்வி வலயத்தில் நடைபெற்ற மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடு!

**(நடராஜா மலர்வேந்தன்)**

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட எல்டெப், கலையருவி தமிழ் வித்தியாலயத்தில் “மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடு நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் தனபாலசிங்கம் கிங்ஸ்டன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து ஆர்வத்துடன் பங்கேற்றனர். விளையாட்டு முறையிலான கற்பித்தல் – கற்றல் நடவடிக்கைகள் மூலம் மாணவர்களின் மொழித் திறன், கணித அறிவு மற்றும் ஆக்கத் திறன் விருத்தி மேம்படுத்தப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு முழுவதும் மகிழ்ச்சிகரமான மற்றும் உற்சாகமான சூழலில் இடம்பெற்றது. மாணவர்களின் செயலில் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் பல்வேறு கல்விசார் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.







# 130,000 ரூபா பெறுமதியான சத்துணவு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கல்!

சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக பிரிவையுடைய, தொண்டைமானாறு தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே-383, கெருடாவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே-386

கெருடாவில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே-385

ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இது வழங்கப்பட்டுள்ளது.

ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் இன்று சனிக்கிழமை காலை ஆச்சிரமத்தில் வைத்து இவற்றை வழங்கினார்.

மாதாந்தம் இவ் உதவித்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# அறுகம்பே சுற்றுலா பருவகாலம் ஆரம்பம்: உணவகங்களில் சுகாதாரப் பரிசோதனை!

**(பாறுக் ஷிஹான்)**

உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தளமான அறுகம்பே சுற்றுலா பருவ காலம் ஆரம்பித்துள்ள நிலையில், பொத்துவில் மற்றும் அறுகம்பே பிரதேசத்தில் தற்போது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனையடுத்து பொத்துவில் மற்றும் அறுகம்பே பிரதேச மக்களுக்கும் அங்குவரும் சுற்றுலா பயணிகளுக்கும் சுகாதாரமான மற்றும் தரமிக்க உணவுகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், பொத்துவில் மற்றும் அறுகம்பே பிரதேசங்களில் உள்ள இரவு நேர உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்கள் கடந்த புதன்கிழமை இரவு அதிரடிச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உவைஸ் பாறுக் தலைமையில், இந்த விசேட சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொத்துவில் மற்றும் அறுகம்பே பகுதிகளில் உள்ள 24 இரவு நேர உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் சுகாதார நடைமுறைகளை மிகவும் மோசமான முறையில் மீறிய 09 உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

உணவக உரிமையாளர்களுக்கு உணவு பாதுகாப்பு நடைமுறைகள், சமையலறை பராமரிப்பு மற்றும் சுத்தமான சூழலை உறுதிப்படுத்துவது தொடர்பில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

சுகாதார சீர்கேடாகக் காணப்பட்ட பெருமளவிலான உணவுப் பொருள்களை அதிகாரிகள் கைப்பற்றி அழித்தனர். மேலும், உணவகப் பணியாளர்களின் மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் சமையலறைகளின் தூய்மை குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த விசேட சோதனையில் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் பொத்துவில், திருக்கோவில், ஆலையடி வேம்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொதுச் சுகாதாரபரிசோதகர்கள்உள்ளிட்டபொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.









# அன்னையர் தின நன்நாளில் அவள்பாதம் பணிந்திடுவோம்!

## (நாளை அன்னையர் தினம்)

ஐயிரண்டு திங்கள் சுமப்பவள் அன்னை
மெய்வருந்தி எம்மை வளப்பவள் அன்னை
கண்ணிமையா எம்மைக் காப்பவள் அன்னை
கருணையின் வடிவா யானவளும் அன்னை

பொய்மையிலா அன்பை பொழிபவள் அன்னை
வாய்மையை மனதில் நிறைப்பவள் அன்னை
தாய்மையெனும் பெருமை பெறுபவளும் அன்னை
தரணியிலே தெய்வ வடிவானவளும் அன்னை

கருவுற்றால் மகிழ்வை காட்டுபவள் அன்னை
கருவளர்ந்தால் அதனைக் காப்பவளும் அன்னை
கருகலைந்தால் உள்ளம் கலங்குபவளும் அன்னை
கருவுருவாய் மலர கடவுளையே நினைப்பாள்

உயிர்போகும் துன்பம் அனுபவிப்பாள் அன்னை
உள்ளிருக்கும் கருவை உயிர்ப்புடனே காண
மடிமீது தவழும் மலர்முகத்தைக் கண்டு
வாழ்வளிக்க வந்த வரமெனவே மகிழ்வாழ்

அன்றலர்ந்த மலராய் அழகுமுகம் பார்த்து
அவள்பட்ட துன்பம் அகன்றதென நினைப்பாள்
அவள்வாழ்வில் அமுதம் அமைந்ததென எண்ணி
ஆனந்த சாகரத்தில் அவள்மூழ்கி நிற்பாள்

இவ்வுலகில் சொர்க்கம் இறங்கியதாய் நினைப்பாள்
இன்பமெலாம் பெருகி வந்ததென மகிழ்வாள்
தன்வாழ்வில் வரமே வாய்த்ததென எண்ணி
தன்குழந்தை முகத்தைப் பார்த்தபடி இருப்பாள்

மடியிருக்கும் குழந்தை வளரவெண்ணி நினைப்பாள்
மற்றவர்கள் மதிக்க வரவெண்ணி உழைப்பாள்
கற்றவர்கள் சபையில் காணவெண்ணி நினைப்பாள்
கற்றுயர்ந்து வரவே கருசுமந்தேன் என்பாள்

பெருமையுடன் பிள்ளை வருவதைக் கண்டு
பெற்றவுடன் பெற்ற மகிழ்வதனை மறப்பாள்
கற்றறிந்து பிள்ளை கையணைக்கும் வேளை
பெற்றதிலும் பெரிதாய் பேரின்பம் அடைவாள்

உதிரத்தைப் பாலாக்கி உவந்தளிப்பாள் அன்னை
உயிர்கொடுத்தும் எமைக்காக்க உவந்திடுவாள் அன்னை
அன்னையவள் உளமதில் அன்பின் உருவாவாள்
அவள்பாதம் பணிந்திடுவோம் அன்னை தினநாளில்!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**

# புலம் பெயரும் உள்நாட்டவர்கள்: சமூக, பொருளாதார அரசியல் பின்னணி?

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயரிய தத்துவத்தைக் கொண்ட சமூகத்தில் இன்று மனித இடப்பெயர்வு என்பது ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டது. ஒரு நாட்டின் குடிமக்கள் தங்களின் வாழ்விடத்தை விட்டு அதே நாட்டுக்குள் வேறொரு பகுதிக்கு அல்லது தங்களின் தாய்நாட்டை விட்டு மற்றுமொரு நாட்டிற்கு இடம்பெயருவதை 'புலம் பெயர்வு' என்கிறோம். சமீபகாலமாக இலங்கை, இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உள்நாட்டவர்களின் புலம் பெயரும் விகிதம் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது. இது வெறும் மக்கள் தொகை நகர்வு மட்டுமல்ல. இது ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் பாரிய மாற்றத்தின் அறிகுறியாகும்.

மக்கள் ஏன் தங்கள் வேர்களை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள் என்பதை ஆராய்ந்தால் அதற்குப் பின்னால் பல அழுத்தமான காரணங்கள் இருப்பதை அறியலாம். அதாவது பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாத சூழலே புலம் பெயர்வுக்கு முதன்மைக் காரணமாகும். சொந்த நாட்டில் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமை மற்றுமொரு காரணமாகும். எனினும் இன்னும் பலர் வேறு சில காரணங்களை குறிப்பிடுகின்றனர்.

உயர்கல்வி கற்ற இளைஞர்களுக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ற வேலைகள் உள்நாட்டில் சமமாக வழங்கப்படாமை, அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணைத் தொடும் போது பிழைப்புத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை உருவாகிறது.

ஒரு நாட்டின் அரசியல் சூழல் சீராக இல்லை எனில் மக்கள் பாதுகாப்பற்ற உணர்வுக்கு ஆளாகிறார்கள். அத்தோடு ஊழல், நிர்வாகச் சீர்கேடு மற்றும் கொள்கை முடிவுகளில் ஏற்படும் குளறுபடிகள் நடுத்தர வர்க்கத்தினரை நாட்டை விட்டு வெளியேறத் தூண்டுகின்றன. தரம் வாய்ந்த உயர்கல்வியைப் பெறுவதற்கும் தங்களின் அடுத்த தலைமுறைக்குச் சிறந்ததொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கும் மக்கள் வளர்ந்த நாடுகளை நோக்கிப் பயணிக்கின்றனர். குறிப்பாக 'மூளைச் சாலை' எனப்படும் அறிவுசார் இடப்பெயர்வு இதனால் தான் நிகழ்கிறது.

உள்நாட்டவர்களின் புலம் பெயர்வை இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது கிராமப் புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி வேலை தேடி வருதல். இது நகரமயமாக்கலை (Urbanization) அதிகரிக்கிறது. மற்றொன்று சிறந்த வாழ்வாதாரம் தேடி ஐரோப்பா, மேற்காசிய நாடுகள் (மத்திய கிழக்கு நாடுகள்) மற்றும் வட அமெரிக்காவுக்குச் செல்லுதல்.

புலம் பெயர்வு ஒரு தனிமனிதனுக்குப் பொருளாதார முன்னேற்றத்தைத் தந்தாலும், சமூக அளவில் அது சில பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. தந்தை அல்லது தாய் வெளிநாட்டில் இருக்கும் போது பிள்ளைகளின் வளர்ப்பு மற்றும் கண்காணிப்பில் இடைவெளி ஏற்படுகிறது. இது சமூகச் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கலாம். அதேவேளை இளைஞர்கள் அனைவரும் வெளியேறிவிடுவதால் உள்நாட்டில் பெற்றோர் (முதியவர்கள்) ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவ்வாறு வேறு நாடுகளுக்குச் செல்லும் போது தங்களின் பூர்வீக கலாச்சாரம் மற்றும் மொழியை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது.

புலம் பெயர்வு பொருளாதாரத்தில் இருமுனை



வாளாகச் செயல்படுகிறது. புலம்பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பலம் சேர்க்கிறது. புலம்பெயர்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்கிறது. மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற திறமையானவர்கள் வெளியேறுவது நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் ஒரு செயன்முறையாகும்.

சட்டவிரோதப் புலம் பெயர்வின் போது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

புலம் பெயரும் அனைவரும் வெற்றிகரமான வாழ்க்கையைப் பெறுவதில்லை. பலர் சட்டவிரோத முகவர்களிடம் சிக்கிப் பணத்தை இழப்பதோடு, உயிராபத்துகளையும் எதிர்கொள்கின்றனர். மொழிப் பிரச்சினை, இனவாதம் மற்றும் அந்நிய நாட்டில் நிலவும் கடுமையான சட்டங்கள் அவர்களுக்குப் பெரும் சவாலாக அமைகின்றன. தாய்நாட்டை விட்டுப் பிரிவது என்பது ஒரு மரத்தைப் பிடுங்கி வேறொரு மண்ணில் நடுவது போன்றது. அது துளிர்விடுவதற்குக் காலம் எடுக்கும், சில சமயம் அது கருகிப் போகவும் வாய்ப்புண்டு.

அதிகரித்து வரும் புலம் பெயர்வைக் கட்டுப்படுத்த அல்லது முறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உள்நாட்டில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும். சந்தை வாய்ப்புகளுக்கு ஏற்ப கல்வி முறையை மாற்றி சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியும். புலம் பெயர விரும்புவோருக்குச் சரியான சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்க அரச நிறுவனங்கள் முன்வர வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதன் மூலம் மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க முடியும்.

புலம் பெயர்வு என்பது இன்று ஒரு உலகளாவிய போக்காக மாறிவிட்டது. வறுமை மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவது கவலைக்குரியது. எனினும் முறைப்படுத்தப்பட்ட புலம் பெயர்வு ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு செய்ய முடியும். நாட்டின் வளங்களும், வாய்ப்புகளும் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கும் போது ஒரு மனிதன் விரும்பிப் புலம் பெயரலாமே தவிர, பிழைப்புக்காகத் துரத்தப்பட மாட்டான். புலம் பெயர்வர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், உள்நாட்டில் அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் ஒரு ஆரோக்கியமான தேசத்தின் கடமையாகும்.

**ஆதம்பாவா பாத்திமா சாஜிதா,**
**மூன்றாம் வருடம்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

# கல்முனை மாநகர சபைக்கு மூன்று மாத கால அவகாசம்!

## மேல் நீதிமன்றம் விடுத்தது




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் குடி தண்ணீர் இணைப்புகளுக்காக தோண்டப்பட்டு, பின்னர் முறையாகச் சீரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படும் வீதிகளை புனரமைக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், எஞ்சியுள்ள பணிகளை நிறைவு செய்ய கல்முனை மாநகர சபைக்கு கல்முனை மேல் நீதிமன்றம் மேலும் மூன்று மாத கால அவகாசம் வழங்கியுள்ளது.

குறித்த வழக்கு, இலங்கை நீதிக்கான மய்யம் (Center for Justice Sri Lanka) அமைப்பால் கடந்த 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கல்முனை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குடி தண்ணீர் இணைப்புப் பணிகளுக்காக மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பல்வேறு வீதிகள் தோண்டப்பட்ட போதிலும், பணிகள் நிறைவடைந்த பின்னர் அவை முறையாக மறுசீரமைக்கப்படாததால் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வாகன சாரதிகள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர் என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. ஸஜீட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கல்முனை மாநகர சபை சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மற்றும் மாநகர உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்தில் முன்னேற்ற அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தனர்.

அந்த அறிக்கையில், குடி தண்ணீர் இணைப்புகளுக்காக வெட்டப்பட்டிருந்த இடங்களில் இதுவரை சுமார் 300 வீதிகள் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

எஞ்சியுள்ள வீதிப் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்ய மேலும் மூன்று மாத கால அவகாசம் தேவைப்படுகிறது என்று மாநகர சபை தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனை பரிசீலித்த நீதிபதி, மீதமுள்ள அனைத்து வீதிப் புனரமைப்புப் பணிகளையும் நிறைவு செய்ய 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் விண்ணப்பதாரர் சார்பில் இலங்கை நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச். இஸ்மாயில் மற்றும் செயலாளர் கலாநிதி நியாத் ஏ. மஜீத் ஆகியோர் முன்னிலையாகினர்.

அதேவேளை, கல்முனை மாநகர சபை சார்பில் சட்டத்தரணி சப்ரின் சலாஹுதீன் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்களும் நீதிமன்றத்தில் முன்னிலை யாகியிருந்தனர்.

# மட்டக்களப்பில் “அம்மாவை வணங்குவோம்” அன்னையர் தின சிறப்பு நிகழ்ச்சி நாளை

(வி.ரி.சகாதேவராஜா)

அன்னை லீலாவதி அறக்கட்டளை நிதியம், அனுசரணையில் கதிரவன் கலைக் கழகம் மற்றும் Battimedia.lk இணைந்து நடத்தும் “அம்மாவை வணங்குவோம்” எனும் அன்னையர் தின சிறப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மட்டக்களப்பு கல்லடி துளசி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு, கதிரவன் கலைக் கழகத் தலைவர் கதிரவன் த. இன்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், தாய்மையின் மகத்துவத்தைப் போற்றும் பல்வேறு கலை மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் 30 ஆளுமைமிக்க அன்னையர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

50 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கவியரங்கமும் நடைபெறவுள்ளது.

# தொகுப்பு நூல்கள் வழங்கும் நிகழ்வு!



(திகாமடுல்ல நிருபர்)

கிழக்கு மாகாண கலை, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் கிழக்கு மாகாண கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டு “கிழக்கின் கவிக் கோர்வை” என்ற பெயரில் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலில், கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழ் இலக்கிய உலகுக்கு முக்கிய பங்களிப்பு செய்த பல கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் கவிதை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், மாகாணத்தின் இலக்கிய அடையாளத்தை பதிவு செய்வதற்கும் இது ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்துள்ளது.

அதேபோன்று “கிழக்கு மாகாண சிறுகதைகள்” என்ற தொகுப்பு நூலும் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுப்பில் இடம்பிடித்த தமிழ் சினிமா பாடலாசிரியரும், கவிஞருமான பொத்துவில் அஸ்மினுக்கு அம்பாறை மாவட்ட கலை மற்றும் கலாசார ஒருங்கிணைப்பாளர் ஏ. எல். தௌஃபிக் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் வைத்து நூலின் பிரதிகளை வழங்கி வைத்தார்.

# ஆஸ்திரேலியாவில் பரிசுபெறும் இலங்கை எழுத்தாளர் நூல்கள்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

ஆஸ்திரேலியாவில் இயங்கிவரும், ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கம் இலங்கை எழுத்தாளர்களின் சிறந்த நான்கு நூல்களைத் தெரிவுசெய் துள்ளது. அவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டன.

நாவல், சிறுகதைத் தொகுப்பு, கவிதை, கட்டுரை ஆகிய நான்கு ஆக்க வகைக ளில் இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் இலங் கையில் வெளியிடப்பட்ட நூல்களில் சங்கத்தின் பரிசளிப்புத் திட்டத்துக்குக் கிடைக்கப்பெற்ற நூல்களில் சிறந்த நூல் களாகத் தெரிவுசெய்யப்பட்டு, ஒவ்வொன் றும்ஐம்பதாயிரம்இலங்கைரூபாவைப்பரி சாகப் பெறும் நூல்களையும், அவற்றை எழுதியவர்களையும் பற்றிய விவரங்கள் இப்போது வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 2024 ஆம் ஆண்டு வெளியி டப்பட்ட நூல்களில் பரிசுபெறும் நூல்க ளதும், அவற்றை எழுதிய எழுத்தாளர் களதும் பெயர் விவரங்கள் வருமாறு,

நாவல்: ஆத்ம அசைவுகள் – நூலாசி ரியர் திருமதி அற்புதராணி காசிலிங்கம் (மலரன்னை) திருநெல்வேலி, யாழ்ப் பாணம்.

சிறுகதைத்தொகுதி: முல்லைக் கோணேஸ் சிறுகதைகள் – நூலாசிரியர் நடராசா கோணேஸ்வரன் (முல்லைக் கோணேஸ்) புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு .

கட்டுரை: நற்பிட்டிமுனைத் தமிழர்




வரலாற்றுச் சால்புகள் – நூலாசிரியர் சஞ்சீவி சிவகுமார், நற்பிட்டிமுனை, கல்முனை.

கவிதைத் தொகுப்பு : ஹுருலீன்கள் – நூலாசிரியர் அஷ்ரபா நூர்தீன் பாலை யூற்று, திருகோணமலை.

ஆஸ்திரேலியாவில் இயங்கிவரும், ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கம் எழுத்தாளர்களுக்காக ஓர் எழுத் தாளர் விழாவையும் மற்றும், தமிழ் இலக் கியம், கலை தொடர்பான நிகழ்வுகளை யும் கடந்த 25 வருடங்களாக நடத்தி வருகிறது.

அவற்றுடன், கடந்த சில வருடங்க ளாக, இந்தச் சங்கம், இலங்கையில் ஒவ் வோர் ஆண்டும் வெளியிடப்படும் தமிழ் நூல்களில் சிறந்த நூல்களுக்குப் பணப்பரிசுகளை வழங்கி வருகிறது.

எழுத்தாளர்களை ஊக்குவித்துப் பாராட்டுவதையும், புதியவர்களை எழுதத் தூண்டுவதுடன் அவர்களுக்குத் தமிழ் எழுத்துலகில் களம் அமைத்துக்கொடுப் பதையும் நோக்கங்களாகக் கொண்டு இந்தப் பரிசளிப்புத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுச் செயற்படுத்தப்படுகிறது.

கட்டுரை நூலுக்கான பணப்பரிசு, ஆஸ்திரேலிய தமிழ் வளர்ச்சிக் கழகத் தின் சார்பாக அதன் தலைவர், கலா நிதி சந்திரிகா சுப்பிரமணியத்தால் வழங் கப்படுகிறது.

சிறுகதை நூலுக்கான பணப்பரிசு, முன்னாள் அமைச்சர், மர்ஹூம், ஏ.ஆர். மன்சூர் அறக்கட்டளையின் சார்பில், திருமதி மரியம் நளிம்டீனால் வழங்கப் படுகிறது.

நாவலுக்கான பணப்பரிசு சங்கத்தின் செயலாளர், மருத்துவர், நோயல் நடேச னாலும், கவிதை நூலுக்கான பணப்பரிசு சங்கத்தின் காப்பாளர் கணநாதன், திரு மதி கணநாதன் ஆகியோராலும் வழங் கப்படுகிறது.

பரிசுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த எழுத்தாளர்களுக்கு உரிய பரிசுத் தொகைகளும், சான்றிதழ்களும் காலக் கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு பிராந்திய பணிப்பாளர் திடீர் விஜயம்

## கண் சிகிச்சை விடுதிக்கு உபகரணங்களும் வழங்கி வைப்பு

**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்துவது மற்றும் அபிவிருத்திப் பணிகள் குறித்த கள ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வியாழக்கிழமை அந்த வைத்தியசாலைக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது, வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகள் உட்பட பல்வேறு பிரிவுகளுக்கும் நேரில் சென்ற பணிப்பாளர், அங்கு நோயாளர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அலகுகளின் செயற்பாடுகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டதுடன் குறைபாடுகளையும் நேரில் அவதானித்தார்.

அதனைத் தொடர்ந்து, வைத்தியசாலையின் அத்தியட்சகர் டீ.பிரபாசங்கர் மற்றும் பொது வைத்திய நிபுணர் வைத்தியர் ஐ.எல்.எம்.சபீக், திட்டமிடல் பொறுப்பு வைத்தியர் வைத்தியர் ஏ.ஆர். நியாஸ் அஹமட், கணக்காளர் எஸ். திருப்பிரகாசம் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது, வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்திப் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கான சுகாதார சேவைகளை மேலும் வினைத்திறனாக முன்னெடுப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தை மக்கள் பாவனைக்கு விரைவாகக் கையளிப்பதற்கும், மகப்பேற்று விடுதியைப் புதிய கட்டடத்துக்கு மாற்றுவதற்கும் உரிய ஒழுங்குகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு இதன்போது பணிப்புரை விடுத்தார்.

வைத்தியசாலையின் கண் சிகிச்சை விடுதிக்கு (Eye Ward) தேவையான அத்தியாவசிய தளபாடங்களை பிராந்திய பணிப்பாளர் இதன்போது கையளித்தார். இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர் உட்பட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# விஜய் ஆட்சி அமைக்க வி.சி.க ஆதரவு: பெரும்பான்மையை எட்டியது த.வெ.க!

## ஆதரவுக் கடிதத்துடன் ஆதவ் அர்ஜுனா தகவல்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் த.வெ.க தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களைக் கைப்பற்றினாலும் கூட, பெரும்பான்மை இல்லாததால் இதுவரை ஆட்சியமைக்க இயலாமல் தவித்த நிலையில், மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் த.வெ.கவுக்கு விசிக ஆதரவு தெரிவித்துள்ளது. இதன்மூலம் அக்கட்சி பெரும்பான்மையை எட்டியது.

இது தொடர்பாக த.வெ.க எம்.எல்.ஏ ஆதவ் அர்ஜுனா கூறும்போது, "அனைத்து தோழர்களுக்கும் எங்களுடைய நன்றி. ஜனநாயகம் காக்கப்படும். தமிழக மக்களுடைய ஆதரவுடன் தமிழக முதல்வராக எங்கள் தலைவர் உருவாவார்." எனத் தெரிவித்தார்.

ஆனால், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பு இன்னமும் நடைபெறவில்லை.

முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்.எல்.ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகி த.வெ.கவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை இராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் த.வெ.க பலம் 112 ஆக உயர்ந்தது.

இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், 'ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கொம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட், வி.சி.க, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐ.யூ.எம்.எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை த.வெ.க. நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.

இதன் தொடர்ச்சியாக, த.வெ.கவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில் த.வெ.கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக வெள்ளிக்கிழமை அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர்.நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் த.வெ.க பலம் 116 ஆக உயர்ந்தது.

அதேவேளையில், வி.சி.க. தலைவர் திருமாவளவனுடனும் த.வெ.கவினர் பேச்சு நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் தி.மு.க தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது.

இதனிடையே, வெள்ளிக்கிழமை மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3 ஆவது முறையாக சந்தித்து, எம்.எல்.ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கொம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்தப் பின்னணியில்தான் வி.சி.கவும் ஆதரவு அளித்துள்ளது. இதன்மூலம் 118 என்ற பெரும்பான்மை பலம் எட்டப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் ஆட்சி அமைக்கின்ற கட்சிக்கு மனமார்ந்த வாழ்த்துகள்

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

"நடைபெற்று முடிந்த 17 ஆவது தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றி



பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித் துக் கொள்கிறேன்." என்று கூறியுள் ளார்.

தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நீடிக்கும் நிலையில், பழனிசாமியின் இந்தப் பதிவு ஒரு 'சிக்னல்' ஆக கருதப்படுகிறது.

தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைப்பதற்கான காய்நகர்த்தல்களை எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் மேற்கொண்டு வந்தனர் என தகவல்கள் பரவி வந்தன. இப்பின்னணியில் புதிதாக அமையவுள்ள ஆட்சிக்கு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளமை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# விஜய் ஆட்சி அமைத்தால் தமிழகத்துக்கே பேரழிவு

## டி.டி.வி. தினகரன் தெரிவிப்பு



"முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ':.போர்ஜரி' செய்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர்."

- இவ்வாறு அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன் தெரிவித்துள்ளார்.

சென்னையின் அவர் இன்று அடையாறில் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது,

"காமராஜ் கையெழுத்திட்டதாக வெளியான காணொலி எங்கு எடுக்கப்பட்டது? காமராஜ் கையெழுத்திடுவது போன்ற காணொலியை எடுத்தது யார்? விஜய்யா, ஆனந்தா, செங்கோட்டையனா?

அந்த காணொலி ஏ.ஐ. ஆக கூட இருக்கலாம். ஏ.ஐ. மூலம் என்ன வேண்டுமானாலும் உருவாக்கலாம். நகல் கடிதத்தை ஆளுநரிடம் கொடுத்தபோது, அசல் கடிதம் எங்கே என அவர் கேட்டிருக்கிறார். அதற்கு த.வெ.கவினர் தருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டனர். அது மோசடி காணொலி என ஆளுநரிடம் கூறிவிட்டோம்.

முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ':.போர்ஜரி' செய்கிறார்கள். த.வெ.கவினர் என்னை மிரட்ட, பயமுறுத்தப் பார்க்கின்றனர். எனது ஒப்புதலுடன் கடிதம் கொடுக்கப்பட்டதாகக் கூறி குழப்பத்தை ஏற்படுத்த பார்க்கின்றனர். என்னை பயமுறுத்தலாம் என பார்க்கின்றனர். எவ்வளவோ நெருக்கடிகளைப் பார்த்தவன் நான். போலி ஆதரவு கடிதம் விவகாரத்தை சும்மா விடமாட்டேன்.

தீயசக்தி எல்லாம் தாண்டி தற்போது தவெக தமிழ்நாட்டுக்கு அழிவு சக்தியாக வந்து நிற்கிறது. தமிழ்நாட்டை அழிக்க வந்த சக்தி. ஆட்சிக்கு வரும் முன்பே திமிராக, அகங்காரமாக ஒரு எல்.எல்.ஏ. தானே என மோசடி கடிதம் தருகிறார்கள்.

ஒரு எம்.எ.ல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர். விஜய் ஆட்சி அமைத்தால், அது தமிழகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும். ஆட்சி அமைக்கவே இவ்வளவு ':.போர்ஜரி' வேலைகள் செய்கிறார்கள்." என்று கூறினார்.

# திருமாவளவன் த.வெ.கவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை





தமிழகத்தின் நலன் கருதி தமிழக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசியல் செய்து வருகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் த.வெ. கவுக்கு ஆதரவை அளிக்க வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களைப் பிடித்து தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருந்தாலும் ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்கள் கிடைக்காததால் தமிழக ஆளுநர் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழகத்தில் உள்ள பல கட்சிகளிடம் ஆதரவு நல்கியதில் அதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியும், இந்திய கொம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிய கொம்யூனிஸ்ட் அவர்களது ஆதரவு கடிதங்களை கொடுத்துள்ளது. இந்த ஆதரவுகளை கொடுத்தும் தமிழக ஆளுநர் 118 உறுப்பினர்களுக்கான ஆதரவுக் கடிதங்களை கொடுத்தால் தான் ஆட்சி அமைக்க முடியும் என்று திரும்பத் திரும்ப திருப்பி அனுப்புவது ஆளுநர் ஏதோ ஒரு உள்நோக்கத்தில் இருப்பது தெரிகிறது.

ஆளுநரை வைத்து பின்புலத்தில் இருந்து கொண்டு பா.ஜ.க. ஆளுநரை இயக்குவதாக பெரும்பான்மையான மக்களால் பேசப்பட்டு வருகிறது. மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்க வேண்டியது அனைவரின் கடமையாகும். அந்த கடமையை மதித்து தமிழகத்தில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை மனதில் கொண்டு தமிழகத்தில் தனிப்பெரும் கட்சியாக உள்ள த.வெ.க வை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்க வேண்டும். இதை தாமதப்படுத்தக் கூடாது. உடனே அழைக்க வேண்டும்.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் இருந்து வெற்றி பெற்ற காங்கிரஸ், மார்க்சிய கொம்யூனிஸ்ட், இந்திய கொம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் தமிழக நலன் கருதி ஆதரவளித்துள்ள நிலையில், தமிழகத்தின் நலன் கருதி தமிழக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசியல் செய்து வருகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவை அளிக்க வேண்டும். அவரது ஆதரவை அளிக்கும் பட்சத்தில் தமிழக ஆளுநர் விஜயை அழைத்து தமிழக முதல்வராக பதவி பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

இப்போது உள்ள சூழ்நிலையை மனதில் கொண்டு தம்பி திருமாவளவன் உடனடியாக தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவளித்து தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து தமிழகத்தில் ஒரு புதிய ஆட்சியை ஏற்படுத்தி ஒரு மாற்றத்தை தமிழக மக்கள் இடத்தில் கொண்டு வந்து தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு அவர் அளிக்கின்ற ஆதரவைக் கொண்டு அமைய உள்ள தமிழக அரசை சிறப்பாக செயல்படுத்த ஆலோசனைகள் வழங்கிட வேண்டும் என்பதை வேண்டுகோளாக வைக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை நிரந்தரமாக முடித்துவைக்க ட்ரம்ப் தீர்மானம்!

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே மூன்று நாள்களுக்கு தற்காலிக போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், இந்த மோதலை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வந்து, தான் தீர்த்து வைத்த பத்தாவது போராக இதை மாற்ற விரும்புகிறார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தத் தற்காலிக அமைதி நீண்டகாலப் போர் நிறுத்தத்துக்கான தொடக்கமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனின் வெற்றியை நினைவுகூரும் வகையில் ரஷ்யாவில் கொண்டாடப்படும் வெற்றி தினத்தை முன்னிட்டு, மே 9, 10 மற்றும் 11 ஆகிய மூன்று நாள்களுக்குப் போர்நிறுத்தம் செய்ய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தப் போரில் உக்ரைனுக்கும் முக்கியப் பங்கு இருந்ததைச் சுட்டிக்காட்டிய ட்ரம்ப், தனது நேரடி வேண்டுகோளை ஏற்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி ஆகியோர் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று கூறினார்.

இந்த மூன்று நாள் போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக, இரு நாடுகளும் தலா ஆயிரம் கைதிகளைப் பரிமாறிக் கொள்ளவும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் போர் குறித்து கவலை தெரிவித்த ட்ரம்ப், "இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மனித உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்ட மிக மோசமான போர் இது. இந்தப் போரில் மாதந்தோறும் ஆயிரக்கணக்கில் இளம் வீரர்கள் கொல்லப்படுகின்றனர். நான் ஏற்கனவே எட்டு அல்லது ஒன்பது போர்களைத் தீர்த்து வைத்துள்ளேன். இந்தப் போரை நான் முடிவுக்குக் கொண்டுவரும் பத்தாவது போராகப் பார்க்க விரும்புகிறேன் என்று ட்ரம்ப் கூறினார்.

இந்த மூன்று நாள் போர் நிறுத்தத்தை மேலும் நீட்டிக்க தான் விரும்புகிறார் என்றும் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஈரானுடனான தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்த இத்தாலி!



அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இடையே ஈரான் போர் தொடர்பாக நிலவிவரும் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியாக, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோ, இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியை சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோம் மற்றும் வத்திக்கானுக்கு மேற்கொண்டுள்ள மூன்று நாள் பயணத்தின் ஒரு பகுதியாக, ரூபியோ ஏற்கனவே இத்தாலிய வெளி விவகார அமைச்சருடன் ஈரான் போர் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசித்துள்ளார்.

ஈரான் மீதான போரை 'சட்டவிரோதமானது' என்று வர்ணித்துள்ள மெலோனி, இப்போரை விமர்சித்த பாப்பரசர் லியோ XIV மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடத்திய தாக்குதல்களுக்கும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வொஷிங்டன் மற்றும் வத்திக்கான் இடையேயான உறவைச் சீர்செய்யும் நோக்கில் ரூபியோ பாப்பரசரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.


பொதுவாக ட்ரம்புடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த மெலோனிக்கு, ஐரோப்பிய நாடுகள் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மற்றும் போப் மீதான ட்ரம்பின் விமர்சனங்கள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தச் சந்திப்பு மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

போப் மீதான டிரம்பின் விமர்சனங்கள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தச் சந்திப்பு மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

கனடா முரசு
சனிக்கிழமை | 06/05/2026

## கனடாவில் வேலையின்மை 6.9 சதவீதமாக அதிகரித்தது

கனடாவின் வேலையின்மை விகிதம் கடந்த ஏப்ரல் மாதத்தில் 6.9 சதவீதமாக உயர்ந்து, கடந்த ஆறு மாதங்களில் இல்லாத உச்சத்தைத் தொட்டுள்ளதாக கனேடிய புள்ளி 02▶



# கனடாவுக்கான அமெரிக்கத் தூதுவர் பங்கேற்கவிருந்த கூட்டம் திடீர் ரத்து

**கனடாவுக்கான அமெரிக்க தூதுவர் பங்கேற்கவிருந்த கூட்டம் ஒன்று திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.**

**கனடாவுக்கான அமெரிக்க தூதரான பீற் கனடா தலைநகர் ஒட்டாவா வில் கூட்டம் ஒன்றில் பங்கேற்க இருந்தார்.**

ஆனால், கூட்டம் நடப்பதற்கு ஒரு மணி நேரம் முன்பு திடீரென அந்தக் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

வெள்ளை மாளிகை அலுவலர்களுடன் முக்கிய சந்திப்பு இருப்பதால், அவர் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதனால், கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்த அமைப்பின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# கனடாவிற்கு விஜயம் செய்தார் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி



அமெரிக்காவின் முன்னாள் (44 ஆவது) ஜனாதிபதி பாரக் ஒபாமா, கனேடிய சிந்த னைக் குழுவான 'கனடா 2020' அமைப்பின் சிறப்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்று டொரண்டோவிற்கு விஜயம் செய்துள்ளார்.

டொரண்டோவில் உள்ள ஃபேர்மாண்ட் ரோயல் யார்க் ஹோட்டலில் நடைபெறும் இந்த அமைப்பின் நிகழ்வில் அவர் முதன்மை உரையை ஆற்றினார்.

நீதியான, உள்ளடக்கிய மற்றும் எதிர் காலச் சிந்தனை கொண்ட கனடாவை உருவாக்குவதற்கான கொள்கை முன்னெடுப்புகளை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்வு, ஊடகங்களுக்கு அனுமதி இல்லாத ஒரு தனிப்பட்ட நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாரக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதி யாக இருந்த காலத்தில் மூன்று முறை உத்தியோகபூர்வமாக கனடாவிற்கு விஜ யம் செய்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு முதல்முறையாக ஒட்டாவாவிற்கு வருகை தந்து அப்போதைய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரைச் சந்தித்த அவர், பின்னர் ஜி8, ஜி20 உச்சிமாநாடுகள் மற்றும் வட அமெரிக்கத் தலைவர்களின் உச்சிமாநாடுகளிலும் கலந்துகொண்டார். டொரண்டோ நகரிற்கு அவர் மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.




# ஒன்டாரியோவில் மூவர் கொலை; சந்தேகநபரான சிறுவன் கைது

கனடாவின் ஒன்டாரியோ மாகாணம், புராக்வில் பகுதியில் உள்ள குடியிருப்பு ஒன்றில் மூவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 17 வயது சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த வியாழக்கிழமை காலை 11:30 மணியளவில் கார்ட்டியர் கோர்ட் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து அவசர அழைப்பு கிடைக்கப்பெற்றதை அடுத்து, அங்கு சென்ற பொலிஸார் மூன்று சடலங்களைக் கண்டெடுத்தனர்.

அந்த இடத்திலிருந்த ஆதாரங்களின் அடிப்படையில் இது சந்தேகத்திற்குரிய மரணம் என உறுதிப்படுத்திய பொலிஸார், மேலதிக விசாரணைகளின் மூலம் நகரின் வெளிப்பகுதியில் இருந்த மற்றொரு முகவரியிலிருந்து மேற்படி சிறுவனைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சிறுவன் மீது மூன்று கொலைக் குற்றச்சாட்டுகளும், பொலிஸ் அதிகாரி ஒருவரைத் தாக்கியமை போன்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களுக்கும் சிறுவனுக்கும் இடையே ஏற்கனவே அறிமுகம் இருந்ததாகவும், இது ஒரு திட்டமிடப்பட்ட தாக்குதல் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவர் குற்றவியல் நீதிச் சட்டத்தின் கீழ் சந்தேகநபரின் அடையாளம் வெளியிடப்படவில்லை.

இந்தச் சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது குறித்த விசாரணை மிகவும் நுணுக்கமாக நடைபெற்று வருவதாகவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பொதுமக்கள் அனுதாபங்களைத் தெரிவிக்குமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தேகநபரான சிறுவன் பிணை விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.









## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்புகள், வர்த்தக நிச்சயமற்ற தன்மை மற்றும் சர்வதேச அரசியல் சூழல்களுக்கு மத்தியில் கனேடிய வேலைவாய்ப்பு சந்தை கடும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது.

ஏப்ரல் மாதத்தில் 15,000 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என ஆய்வாளர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், மாறாக 17,700 வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன.




குறிப்பாக, முழுநேர வேலைவாய்ப்புத் துறையில் 46,700 பணியிடங்கள் பறிபோயுள்ளன.

இது பகுதிநேர வேலைவாய்ப்புகளில் ஏற்பட்ட 29,000 அதிகரிப்பால் ஓரளவுக்கு ஈடுசெய்யப்பட்டாலும், ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு சந்தையில் பலவீனம் தொடர்வதையே இது காட்டுகிறது.

பொருட்களை உற்பத்தி செய்யும் துறையில் ஏற்பட்ட 26,800 வேலை இழப்புகள், அமெரிக்க வர்த்தகக் கட்டுப்பாடுகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றன.

அதேவேளை, வேலை தேடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் 'பங்கேற்பு விகிதம்' 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. மத்திய வயதுடையவர்கள் மற்றும் இளைஞர்களிடையேயான வேலையின்மை விகிதமும் முறையே 6 சதவீதம் மற்றும் 14.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.